இணையத்தில் பதிவிறக்கம் செய்ய www.iaraindia.com
தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டு ஆய்விதழ்
ISSN: 2320-3412(P), 2349-1639(O)
Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)
பகுதி X, பதிப்பு 24, ஜூலை – டிசம்பர்; 2026
Formally UGC Approved Journal (64089), © Author

# அக இலக்கியங்களில் முருகனும் வேலன் வெறியாடலும்

**ந. தேவிகா**
முழு நேர முனைவர் பட்டம் ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை
அரசு கலைக் கல்லூரி, பு.முட்லூர்

**சு. வடிவாம்பிகை**
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்
அரசு கலைக் கல்லூரி, பு.முட்லூர், சிதம்பரம்

**ஆய்வுச் சுருக்கம்**

*முருகன் வழிபாடு என்பது தமிழர் சமய மரபின் ஒரு பகுதியாக மட்டும் இல்லாமல், அவர்களின் வாழ்வியல், பண்பாடு, மற்றும் சமூக நம்பிக்கைகளோடு ஆழமாக இணைந்துள்ள தொன்மையான வழிபாட்டு மரபாகும். குறிப்பாக சங்ககால இலக்கியங்கள் முருகனைக் குறிஞ்சி நிலத்தின் தெய்வமாக மட்டுமின்றி மக்களின் அன்றாட வாழ்விலும், உணர்வுலகிலும், இடம்பிடித்த இறைவனாகப் பதிவு செய்கின்றன. அவ்வழிபாட்டு மரபில் சிறப்பான சடங்குகளாக விளங்குவது வேலன் வெறியாட்டம் ஆகும். அக இலக்கியங்களில் முருகன் குறித்த பதிவுகளையும், வேலன் வெறியாட்டம் குறித்து செய்திகளையும், இலக்கியச் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்கிறது .தொல்காப்பியம், அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, ஐங்குறுநூறு,போன்ற நூல்களில் இடம்பெறும் முருக வழிபாட்டு மரபுகள், வேலனின் செயல்கள், வெறியாட்டத்தின் நோக்கம், பண்பாட்டு முறையில் விளக்கப்படுகின்றன. தலைவியின் காதல் வேதனையை தெய்வம்*

*தாக்கமாக கருதி வேலனை அழைத்து வெறியாடும் மரபு அக்கால மக்களின் சமய நம்பிக்கை, சமூக அமைப்பும்,மற்றும் உளவியல் சிந்தனை, எவ்வாறு வெளிப்படுத்துறது என்பதனைக் காணமுடிகிறது. இதன் மூலம் வேலன் வெறியாட்டம் ஒரு சடங்குகளாக மட்டுமல்லாமல் சங்ககால தமிழரின் வாழ்வியலையும்,பண்பாட்டு மரபையும், உணர்த்தும் முதன்மையான ஆதாரமாக விளங்குகிறது. அக இலக்கியங்களில் முருகனின் இடத்தையும், வேலன் வெறியாட்டத்தின் தோற்றம், நோக்கம்,சடங்கு முறை, சமூக பங்கு,மற்றும் இலக்கியப் பதிவுகளை ஒருங்கிணைந்து ஆராய்கிறது. மேலும் முருக வழிபாட்டின் தொன்மையும், வேலன் வெறியாட்டத்தின் பண்பாட்டு அடையாளத்தையும் இலக்கியச் சான்றுகளில் அடிப்படையில் விளக்கி சங்ககால தமிழரின் வழிபாட்டு மரபை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**திறவுச்சொற்கள்:** முருகன், வேலன், வேறியாட்டம். முதுவாய்வேலன், வெறியாட்டாளன், வெறி விலக்கல், வேலன் வெறியாடல் , களம் அமைத்தல், பலி வழிபாடு, கட்டு விச்சு.

**முன்னுரை**

தமிழர் பண்பாட்டு வரலாற்றில் இயற்கையும், இறை நம்பிக்கையும், ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்த கூறுகளாக விளங்குகின்றன. இயற்கை நிலங்களை அடிப்படையாகக் கொண்டு உருவான வாழ்வில் மரபு பின்னால் சமய நம்பிக்கையாக வழிபாட்டு முறைகளாகவும் வளர்ச்சி அடைந்தன. அவ்வகையில் குறிஞ்சி நில மக்களின் வாழ்வியலோடு பிரிக்க முடியாத தெய்வமாக முருகன் திகழ்கிறான். மலை, வேட்டை, வீரஉணர்வு, காதல், வளமை, இனக்குழு வாழ்கை, ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அடையாளமாக முருகன் சங்க இலக்கியங்களின் சித்தரிக்கப்படுகிறான். ஆதனால் ஆக இலக்கியங்களை முருகனைப் பற்றிய செய்திகள் வெறும் சமயக் குறிப்புகளாக அல்லாமல், தமிழரின் அன்றாட வாழ்வில் அங்கமாவே அமைகின்றன. அக இலக்கியங்களில் மனித மனதில் நுண்ணிய உணர்வுகளைப் பதிவு செய்தாலும், அவற்றின் பின்னணியில் சமூக நம்பிக்கைகள், வழிபாட்டு மரபுகள், சடங்கு முறைகள், ஆகியவை மறைமுகமாக பிரதிபலிக்கின்றன. தலைவியின் உடல் மற்றும் மன மாற்றங்களைப் புரிந்துகொள்ள முடியாத சூழலில், அவை

தெய்வத்தின் செயலாகக் கருதப்பட்டு, முருகனின் அருளைப் பெறுவதற்காக வேலன்மூலம் வெறியாட்டம் நடத்தப்படுகின்றது. இந்நிகழ்வு வெறும் சமயச் சடங்காக இல்லாமல், அக்கால மக்களின் பண்பாட்டு மரபுகளை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய சான்றாகும். முருகனை மையமாகக் கொண்ட வழிபாட்டு முறைகளில் வேலன் வெறியாட்டம் தனித்துவமான இடத்தை பெறுகிறது. வேலன் என்பவன் முருகனின் அருளை ஏற்று மக்களுக்கு உரைப்பவனாகவும்,நோயின் காரணத்தை கண்டறிபவனாகவும்,சமூகத்தின் நம்பிக்கையை நிலை நாட்டுபவனாகவும், கருதப்படுகிறான். தொல்காப்பியம் தொடங்கி அகநானூறு,குறுந்தொகை,நற்றிணை, ஐங்குறுநூறு, போன்ற அக இலக்கியங்கள் முருகனின் வேலன் வெறியாட்டத்தை பல்வேறு கோணங்களில் பதிவு செய்கின்றன. இச்செய்திகள் வழியாக சங்ககால மக்களின் இறைநம்பிக்கை, குறிஞ்சி நில வழிபாட்டு மரபு, காதல் வாழ்வியலின் சமூக வெளிப்பாடு ஆகியவற்றை அறிய முடிகிறது.எனவே அக இலக்கியங்களில் முருகன் வழிபாட்டின் தொன்மையும், வேலன் வெறியாட்டத்தில் பண்பாட்டு மற்றும் இலக்கிய பொருளையும் ஒருங்கிணைந்த ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

**இயற்கை வழிபாடு**

சங்ககால மக்கள் தாங்கள் தொழில் அடிப்படையிலேயே தெய்வத்தை உருவாக்கினார். மக்கள் வாழும் இடம் காலம் இவைகளுக்கு ஏற்பவே அவர்களுடைய அக வாழ்க்கையும், புற வாழ்க்கையும், அமந்திருந்தன. இந்நிலையில் மக்களின் இருப்பிடம், சமுதாய அமைப்பு, தொழில், இவைகளுக்கு ஏற்பவே தெய்வங்களும் அமைந்து இருந்த தன்மையை தமிழின் ஆதி இலக்கண நூலாகிய தொல்காப்பியம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"மாயோன் மேய காடுறை உலகமும்,
சேயோன் மேய மைவரை உலகமும்,
வேந்தன் மேய தீம்புலனல் உலகமும்,
வருணன் மேய பெருமணல் உலகமும்,
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்,
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே".

(தொல்: அகத்திணை; நூற்பா;5),

என்பதனை பாடல் மூலம் அறியலாம்.

**ஐந்திணைகளில் முருகன் பெயர்கள்**

**முருகு:**

'முருகு' என்ற சொல்லுக்கு 'அழகு' என்ற பொருளாகும். முருகு என்றால் அழகன் என்று பொருள் கொள்ளலாம். முருகு என்பது பல பொருள் குறிக்கும் ஒரு சொல்.அப்பல பொருள்களுள் சிறப்பாக குறிக்கத்தக்கன நான்கு. அவை **மணம், கடவுட்டண்மை, அழகு,இனிமை, என்பன என்று.தமிழ் தென்றல் திரு.வி.க (முருகன் அல்லது அழகு ப;9)அவர்கள் குறிப்பிடுகிறார்**. அடுத்ததாக முருகர் என்ற சொல் வலிமை என்ற பொருளோடு ஒப்பிட்டு பார்க்கப்படுகிறது.

"முருகு உறழ் முன்பொடு கடுஞ் சினம் செருக்கி
"(நற்;பா;225),

**சேய்**

'சேய்' என்னும் பெயரில் பொருள் 'புதல்வன்' என்று மகன் என்றும் சொல்லப்படும். இப்பெயரால் முருகன் ஆன்றோர் சான்றோர் மற்றும் தம்முடைய பக்தர்கள் அனைவருக்கும் சேயாகவே திகழ்கிறார். குறுந்தொகையில் முதல் பாடலிலேயே,

கழல் தொடி சேஎய் குன்றம்"
(குறுந்:பா:111),

சிவந்த அன்பினையும் சிவந்த கொம்புடைய யானைகளையும் உடைய கைகளில் வீரகழல் அணிந்திருக்கும் பெருமானே குன்றின் மேல் இருப்பவன் 'சேய்' என்று கபிலர் பாடுகிறார்.

**நெடுவேல்**

நீண்ட நெடியவாலை கையில் ஏந்தி இருப்பவன் முருகன் அதுவே இப்பெயருக்கு காரணம் எனலாம். தமிழர்களின் முதல் கடவுள் மக்களை காப்பதற்கு மட்டுமல்லாது மக்களுக்கு துன்பம் தரக்கூடிய எதிரிகளையும் வெட்டி வீழ்த்த கூடிய ஓர் வீரனாகவே காணப்படுகிறான்.

"வேலன் வென்றி நெடுவேள்" (குறுந்;பா;111).

என்பதனை நற்றிணையில் தலைவி தலையில் சூடியுள்ள பூ தலைவன் கொடுத்தது என்று அறியாததால் நெடுவேல் முருகனே இதற்கு காரணம் என்று எண்ணுகிறார்கள் அதனால் தலைவி

முருகன் தன்னை ஆட்டி வைக்கவில்லை என்று உண்மையை தாயிடம் கூறுவதால் முருகனுக்கு என்ன குறை வந்துவிடும் என்று என்று ஒரு தோழியிடம் வினாவுகிறார்.

**நெடியோன்**

கூடல் நகரின் மேற்கு திசையில் மயில் கொடி எப்பொழுதும் பறந்து கொண்டே இருக்கும். அங்கு எப்போதும் விழாக் கோலம் பூண்ட திருப்பரங்குன்றத்தின் புகழ் இப்பாடலில் சொல்லப்படுகிறது. அவ்வரிகளில் முருகன் நெடியோன் என்று குறிப்பிட்டு வருகிறது. திருப்பரங்குன்றம் பற்றியே இப்பாடல் சிறப்பாக சொல்கிறது. இதனை,

"நெடியோன் குன்றத்து" (அகம்:பா;149),

என்ற பாடல் மூலம் அறியலாம்.

**பெருந்தவம்**

தலைவியின் பசலை நோய்க்கு ஆட்டுக்குட்டி அறுத்து பலியிட்டாலும் தினையரிசிப் படைத்து வழிபட்டாலும் இசைக்கருவி முழங்கி ஊர் புறத்தே செய்து இப்படி மரபின்படி வழிபாடு செய்தாலும் நோய்க்கு மருந்தாக பெருந்தெய்வமாகாது. இப்பாடலில் "வேற்றுப் பெருந் தெய்வம்" என்று குறிப்பிடுவதை அறியலாம்.

"நோய்க்கு மருந்தாகா வேற்றுப் பெருந் தெய்வம் பலவுடன் வாழ்த்தி

(குறுந்:பா;263).

**மலையுறை கடவுள்**

தலைவியை விட்டு பிரிந்த தலைவன் பரத்தையிடம் சென்றிருப்பான் என்று தலைவி நினைக்கிறார். தன் தவறு உணர்ந்து தலைவியின் சிறப்பை நினைத்து பார்க்கிறான் தலைவன். மலைமீது பூத்துக் குலுங்கும் வேங்கை மலர்களை ஆரமாகக் தொடுத்து முருகனுக்குச் சூட்டிப் பூசை செய்து வாழ்த்தி வழிபடுகிறார் தலைவி. இப்படிப்பட்ட குன்றக்குறவனின் அன்பு மகளை விட்டு பிரிந்தேன் என்று வருந்துகிறான். இந்த தலைவனின் குலதெய்வமாக மலையுறை கடவுள் முருகன் என்பதனை ஐங்குறுநூறு பாடல் மூலம் அறிய முடிகிறது.

"குன்றக்குறவன் காதல் மடமகள்,
மன்ற வேங்கை மலர் சில கொண்டு,
மறையுரை கடவுட் குலமுதல் வழுத்தி,"

(ஐங்குறு;பா;259).

**மலைவாழ்**

தலைவியின் மாற்றத்திற்கான காரணம் முருகன் என்று வெறியாட்டாளன் சொல்லுவது பொய் என்றும் தெரியும். இப்பாடல் வரிகளில் மலையில் வாழ்கின்றவன் முருகன் என்றும் அவனுக்கு கடும் சினம் கொண்டவன் என்று குறிப்பு உள்ளது. மலைமீது வாழ்வதால் மலைவான் என்பதும் முருகனுக்கு ஒரு பெயர் ஆகிறது.

"மலைவான் கொண்ட சினைஇய வேலன்". (ஐங்:248).

வெறியாட்டு விழாவைப் பற்றிய செய்திகளை கூறும் ஐங்குறுநூறு பாடல் இது.

**செவ்வேலான்**

முருகப்பெருமான் சூரபத்மனைக் கொன்ற புராணச் செய்தி கலித் தொகையில் சொல்லப்பட்டுள்ளது. முருகனின் ஆயுதமான வேல் பகைவர் பலரைக் கொன்று எப்போதும் இரத்தக் கறையுடன் செவ்விய நிறத்தோடு இருப்பதால் செவ்வேல் என்று குறிப்பிடப்படுகிறது. இச்செய்தினால் போரில் வல்லவன் முருகக்கடவுள் என புலனாகிறது. முருகப் பெருமானின் அருட்பெறும் செயல்கள் பல உண்டு. அதில் குறிப்பிடத்தக்கது சூரபத்மனை வதம்

"சூர் கொன்ற செவ்வேலாறா பாடி" (கலித்:பா;93),

**சேவலங் கொடியோன்**

முருகனின் பாதத்தைத் தாமரை மலராகவும் மேனி அழகேப் பவளமாகவும் உடை குன்றின்மணி போல் மிளிர்வதாகவும் கூறப்படுகிறது. சேவல் சின்னம் பொறிக்கப்பட்ட கொடியை ஏந்தி உள்ளவன் அதனால் சேவலங் கொடியோன் என்று சிறப்பு பெயரால் அழைக்கப்படுகிறான் முருகன்.

"சேவல் அம் கொடியோன் காப்ப,
ஏம வைகல் எய்தின்றால் உலகே,"

(குறுந்: கடவுள் வாழ்த்து:பா:1)

**முருகனின் தோற்றம்**

தொன்மை இலக்கண நூலான தொல்காப்பித்திலும் சங்க இலக்கிய நூல்களிலும் சேயோன் , சேய், செவ்வேள், ஆகிய சொற்கள் முருகக் கடவுள் குறித்து வழங்கும் சொற்களாக விளங்குகின்றன.

தொல்காப்பியர் என்று குறிப்பிட்டுள்ளதனை நச்சினார்க்கினியர் உரை எழுதும் போது "செங்கேழ் முருகன்" எனக் குறிப்பிடுகிறார்.

"செங்கேழ் முருகன் காதலித்த வான்,
தங்கிய வரைசூழ் உலகம்,"
(தொல்; பொருள்; அகத்திணையியல்),

பழைய தமிழ் நூல்களில் சேயோன் ,சேய், என்ற சொல் வரும்போதெல்லாம் 'சிவந்த நிறமுடையவன்' செந்நிறத்தான் முருகன் என பொருள் கொண்டு எழுதியுள்ளனர் என்பதனை திருமுருகாற்றுப்படையும் கூறுகிறது.

"செய்யவன் சிவந்த ஆடையன் செல்வரைக்,
கொடியன் நெடியன் தொடியண்டி தோலின்",
(திருமுருகு:206–212),

என்னும் பாடல் அடிகள் கூறுகின்றனர். முருகன் சிவந்த மேனியை உடையவன் என்று நக்கீரர் தம் நூலில் கூறியுள்ளார்.

முருகனின் நிறம் சூரியனைப் போன்ற சிவந்த நிறந்தையுடையவன் என்பதனை இளவெயினார் பரிபாடலில் கூறுகிறார். என்பதை,

"ஞாயிற்றேர் பிறந்ததை"(பரி:12),

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

**வெறியாடலோடு தொடர்புடைய சொற்கள்**

**வேலன்;**

குறிஞ்சி நிலத்தில் வாழும் வேலன் வேடம் பூண்டு அணங்கு ஏறப்பெற்றவர்களுக்கு குறி சொல்வான் இவன் வெறியாட்டாளன் என்று அழைக்கப்படுவான்.

**வெறியாட்டம்:**

வேலன் வேடம் பூண்டு ஆவேசமுற்று தெய்வம் ஏறி ஆடும் கூத்து. இதனை,

"வேலன் புனைந்த வெறியர் களந்தொறும்" (குறுந் பா: 53 ;வரி :3)

தொல்காப்பியம் இதை வெறியாட்டு என்று குறிப்பிடுகிறது.

**தெய்வக் குற்றம்:**

செவிலியானவள் தலைவியின் உடல் மெலிவு கண்டு இது தெய்வம் குற்றத்தால் ஏற்பட்டதோ என நினைத்தல்.

"வெளியேறி சிறப்பின் வெவ்வாய் வேலன்" (தொல்:களவு;5),

**வெறியாட்டு:**

வேலன் முருகனின் அருள் பெற்று ஆடு அறுத்து ஆடும் போது பாடும் பாட்டு.

"விழவினுள் வேலன் ஏத்தும் வெறியும்,
உறவே…………… ."(பரி:4;வரி;14–15),

**வெறிகளம்:**

வேலன் வெறியாட்டு நிகழ்த்துவதற்குரிய இடம்.

"வேலனும் வெறிக்களம் ஏறுதல் ஆக", (கலித்:1;வரி:23),

**வெறி விலக்கல்:**

தலைவியின் காதல் நோயை தெய்வக் குற்றம் என எண்ணி நடக்க விருந்த வேலன் வெறியாட்டை தோழி அல்லது செவிலி உண்மைக்காரணத்தை எடுத்துரைத்து தடுத்து நிறுத்துதல் வெறிவிலக்கலாகும்.

"வெறி விலக்கலுறும் தோழி தமர் கேப்பத்,
தலைமகளை வினவுவளாய்ச் சொல்லியது" ( ஐங் :247),

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

**தொல்காப்பியம் குறிப்பிடும் வேலன் வெறியாடல்**

வெறியாடலிற்கு முன்பே இவ்விரு நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது என்பதனை தொல்காப்பியம் வழி அறிய முடிகிறது. இரு செயல்களும் தெய்வத்திற்கு சிறப்பு செய்ய வேண்டும் என்பதை தெரிவிக்கின்றது. தலைவியின் நோயை குறித்து கட்டு வைத்தல், கழங்கு பார்த்தல், ஆகிய முறைகள் நோயை அறிந்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையை அறியமுடிகின்றது.அகத்திணையில் வேலன் குறித்த பல்வேறு செய்திகள் காணப்படுகின்றன.

"வெறியாட் யிடத்து வெருவின் கண்ணும்,
ஐயப் செய்கை தாய்க் கெதிர் மடுத்துப்,
பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும் "(களவு:23),

என்றும்,

"கட்டினுங் கலங்கினும் வெறியென விருவரும்,
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும் "(களவு;24),

என்ற பகுதியிலும் தலைவி, தோழி,செவிலி, இடங்களில் வேலன் வெறியாடல் செய்திகள் கூறப்படுகின்றன. தொல்காப்பியத்தில் உள்ளதை போலவே சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன.

**குறிஞ்சி நில மக்களின் வேலன் வெறியாட்டு தொடக்கம்**

வேலன் வெறியாட்டம் ஆடுவதும் வள்ளைப்பாட்டுப் பாடுவதும் அவர்தம் பண்பாட்டு அடையாளங்களாக விளங்கின. குறமகள் குறி சொல்வதும் பெற்றோர் காதலை ஏற்க மறுக்கும் போது காதல் தன்மை கூற வந்த தலைமகன் மடலேறி வருதலும், இறை வழிபாட்டின் போது விலங்கினங்களை பலியிடுதலும், தினைப்புனத்தின்போது முதல் விளைச்சலை ஒரு பகுதியை இயற்க்கைக்கு படைத்ததும், குறிஞ்சி நில மக்களிடையே காணப்பட்டன.இந்நில அகவாழ்வியல் குறித்து அறியப்படுகிறது. அகத்துரைக்கே உரியவனாகிறான். மகளின் நோய்க்கு காரணம் அறிய விரும்பும் அன்னை வெறியாட்டு எடுக்கின்றாள். தலைவி பொருட்டுத் தெய்வம் குறித்து எடுக்கப்படும் வழிபாட்டு நிகழ்ச்சி முருகனுக்கு உரியதாகும். மகளிர் மலையுறை கடவுளைக் கைகூப்பி வணங்கியதை,

"கொடிச்சியர் கூப்பி வரை தொழு கை போல்"

(கலி:குறி;பா;3:அடி;26)

என்னும் பாடல் மூலம் குறிஞ்சி நில மக்கள் முருகனை வழிபட்டச் செய்திகளை அறியமுடிகிறது.

**வேலனின் தோற்றம்**

கழங்கின் வழியாகவும் குறி பார்க்கப்படும் இந்த முறையில் குறி செல்பவன் பெயர் வேலன் என்பதாகும். இவன் முருகனின் பூசாரி ஆவான் படிமத்தான் என்று அழைக்கப்படுவான். தலைவிக்கு ஏற்பட்ட நோயை வேலன் கழங்கின் மூலமாக கண்டுபிடித்து இந்நோய் முருகனால் வந்தது என்று வேலன் கூறுவான். அன்னை வேலனைக் கொண்டு வெறியாடுதலுக்கு ஏற்பாடு செய்வாள். இச் செய்தியைப் பல சங்க நூல்கள் கூறியுள்ளன.

"நாறுகொள் பிரசம் ஊறுநா டற்குச்,
காதல் செய்தவும் காதலன் அன்மை,
யாதெனில் கொல்லோ தோழி – வினவுகம்,
பெய்மணல் முற்றங் கடிகொண்டு,
பெய்மலி கழங்கின் வேலற் தந்தே",

(நற்;268),

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

**செந்நிற ஆடையும், செந்நிற மலர்களும்**

வட மாநிலத்தில் வேலன் முதலில் சிவப்புக் கரையுடைய வெள்ளாடையை உடுத்திக் கொள்கிறான். இவ் ஆடையைக் 'காணி' என்று அழைப்பர். ஆடையின் மேலே சிவப்பு நிற ஆடையை இவன் அணிகின்றான். இதற்கு சிவப்பே என்பது பெயராகும். குறுந்தொகையில் கடவுள் வாழ்த்து பாடலில் முருகன் குன்றி விதை போன்ற சிவப்பு நிற ஆடையை அணிந்திருந்ததாக கூறப்பட்டுள்ளது.கலித்தொகையில் முருகனுக்கு பாதங்களில் வெண்ணிற ஆடை இருந்ததை சிவப்பு காளை மாட்டினுடைய வெள்ளைக் காலோடு ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். முருகனுக்கு சிவப்பு ஆடையை அணிந்ததிலும் வட மலையாள வேலனும் சிறப்பு ஆடையை அணிவதிலும் ஒற்றுமை உள்ளது.

வேலன் வெறியாடலில் செந்நிற மலரை பயன்படுத்துவதும் முக்கியமான செய்தியாகும். வேலன் சிவந்த செச்சை மலராதார் ஆன கண்ணியை அணிந்திருந்ததாக திருமுருகாற்றுப்படையில் கூறுகிறது.**என்பதனை (சங்க நூல்களில் முருகன்.பி.எல்.சாமி.பக்கம்:32 –34), கூறுகிறார்.**

**வேலன் வெறியாட்டு நிகழ்த்த காரணம்**

தலைவனை பிரிந்த தலைவி அப்பிரிவைத் தாங்க முடியாமல் காதல் நோயால் வருத்தமுற்றுக் காணும் பொழுது, இவள் முருகனால் வருத்தப்பட்டாள் என்று தாய் கருதி வெறியாட்டு எடுக்கிறாள்.

"அணங்கு அறி கழங்கின் கோட்டம் காட்டி,
வெறி என உணர்ந்த உள்ளமொடு மறி அறுத்து,
அன்னை அயரும் முருகு நின்,
பொன் நேர் பசலைக்கு உதவாமாறே", (நற்றிணை:47),

என்னும் பாடல் மூலம் அறியலாம்.

**வேலன் வெறியாடல் களம் அமைத்து, மலர்கள் தூவுதல்**

சங்க இலக்கியங்களில் வேலன் அமைத்த களத்தில் பல பூக்கள் தூவப்பட்டுள்ளதை அகநூனூறு பாடல் எடுத்துரைக்கின்றன.என்பதனை,

"கேளாய் எல்ல தோழி வேலன்,
வெறியர் களத்து சிறுபல தாஅய,
விரவுவி உறைந்த ஈர் நறும் புறவின், (அகம்:114),

வேலன் வெறியாடும் களம் அமைத்து கையில் உள்ள வேலிருக்கு மாலை சூட்டினான் என்பதனை அகநானூறு பாடல் அறியப்படுகிறது.

"களம் நன்கு இழைத்து, கண்ணி சூட்டி" (அகம்:22;வரி;8).

வேலன் மூங்கிலால் ஆன களம் அமைத்து அதன் எல்லா பிரிவுகளிலும் ரத்தம் தெளித்து, அக்களத்தை பல விதங்களில் அமைக்கிறான். அது சதுரமாகவோ, வட்டமாகவோ, இருக்கலாம்." யந்திரம்" என்ற பெயரால் அது அழைக்கப்படுகிறது. யந்திரம் வரைந்து வழிபடும் இன்றைய பழக்கத்தின் மூலத்தை வேலன் களம் வரையும் பழக்கத்திலிருந்து பழைய வழிபாட்டையொட்டிய பூசாரிகளின் வழிபாடுகளிலிருந்து ஆராய்ந்து கண்டறியலாம். **என்பதனை (மக்களும் மரபுகளும், பக்கம்:7 ) என்று பி . எல். சாமி. குறிப்பிடுவதில் இருந்து வேலன் வெறியாடலின் எச்சத்தை இப்போதைய வழிபாட்டுகளில் இருந்து அறிய முடிகிறது.**

**கழற்காயை கொண்டு வேலன் குறி கூறுதல்**

அக்காலத்தில் ஊர் மக்கள் வேலன் என்ன செய்கிறானோ அதுவே உண்மை என்று நம்புவர். அதன்படி வேலன் குறி சொல்லும் இடத்தில் பழைய மணலை மாற்றிப் புதுமணல் பரப்பப்படும் 'வேலன்' தலையில் ஆடையைக் கட்டிக் கொள்வான். கையில் வளைந்த கொம்பு ஒன்றை வைத்திருப்பான். அக்கொம்பில் பல கிளைகள் இருக்கும். ஒவ்வொரு கிளையிலும் ஒரு பை தொங்கும். அப்பைகளில் கழற் காய்களை அள்ளி எடுத்து முருகன் முன் வைப்பான். காய்களின் எண்ணிக்கைக் கணக்கிட்டு குறி சொல்வான்.

**கன்னம் என்பது மந்திரத் தகடு உள்ளே வைக்கப்பட்ட தாயத்து ஆகும். கழங்கு போட்டுப் பார்த்து அதன்மேல் தெய்வத்தை வரச்செய்து அக்கழற்காய்களுக்குக் கன்னம் என்ற தாயத்தை அணிவித்து வேலன் வெறியாட்டு நிகழ்த்துவான்.அச்சமயம் தலைவியின் கைகளில் இம்மந்திர தாயத்தை கட்டிவிட்டுக் குறி சொல்வான். இதுவே 'கன்னந்தூக்கல்' எனப்படும். என்பதனை,(சீ. முத்துலட்சுமி. சங்க இலக்கிய பாடல்களில் காணலாகும் முருக வழிபாட்டின் வாய்மொழி வாய்ப்பாட்டு கோட்பாடு.பக்கம்:5–6). கூறுகிறார்.**

"பொன்னகர் வரைப்பின் கன்னம் தூக்கி" (ஐங்குறு:247),

என்னும் பாடல் அடிகள் "கன்னந்தூக்கல்" பற்றி கூறுகிறது.

**கட்டிவிச்சியை அழைத்தல்**

கட்டிவிச்சு – குறி சொல்பவள்

அக்காலத்தில் தலைவியானவள் தலைவன் மீது காதல் கொள்கிறாள். தலைவன் தலைவியை விட்டு பிரிந்து சென்று விடுகிறான். இதனால் தலைவியின் உடல் மெலிந்து பசலை நோய் ஏற்பட்டு விடுகிறத. இதனை அறிந்த தலைவியின் தாய் கட்டி விச்சியே குறி கேட்டால். கட்டிவிச்சு முறத்தில் நெல் ,அரிசி, முதலியவற்றை விட்டு,சோழிகளை உருட்டி எண்ணிக்கையைக் கணகக்கிட்டு குறி சொல்ல ஆரம்பிக்கும் பொழுது குறிஞ்சி நில கடவுள் முருகப்பெருமான் நிறைந்து காணப்படும் மலைகளையும் அழைத்துப் பாட்டுபாடுவாள்.பின்னர் தலைவியைக் கண்டு,

முருகு புணர்ந்து இயன்ற வள்ளி போல" (நற்றிணை:82),

எனத் தலைவியை வேலன் அணங்கியுள்ளான் என்று குறி கூறுவாள். இதனையே 'கட்டுக்காணுதல்' என்பர்.

**வேலன் வெறியாடலின் பலி கொடுத்தல்**

வெறியாடலின் போது பலி கொடுத்தல் என்பது முக்கியமாக கருதப்படுகிறது. என்பதனை,

வெறியென உணர்ந்த உள்ளமொடு மறிஅறுத்து",

(நற்:47;9).

என்று நற்றிணை பாடல் வரிகள் குறிப்பிடுவதனை அறிய முடிகிறது.

வேலன் முருகப்பெருமான் வணங்கி ஆட்டை அறுத்து பலியிட்டான் என்பதனை குறுந்தொகை பாடல் மூலமும் அறியலாம்.

"மரிக்குர லறுத்த தினைப் பிரப்பு இரீஇ" (குறுந்:263;1),

என்று குறுந்தொகை பாடல் அடிகள் தினை அரிசியைத் தூவி பலி கொடுத்ததைக் குறிப்பிடப்படுகிறது.

தலைவன் ஒருவன் யானையைத் அம்பினால் எய்கின்றான். அதனால் குருதி ஏற்பட்டது அந்தக் குருதியை வெறியாடல் களத்தில் மறிய அறுத்துக் குருதிப் பலி கொடுப்பதுடன் ஒப்பிட்டுக் கூறப்படுகின்றன. இதனை,

".வார் கோல்,
ஆடு உறும் பதவி வாங்கி, கண்டு விசை,
அண்ணல் யானை அணிமுகத்து அழுத்தலின்,
புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து இழிதர,

புள்ளி வரிநுதல் சிதைய நில்லாது,
அயர்ந்து புறங் கொடுத்த பின்னர் நெடுவேள்,
அணங்குறு மகளிர் ஆடுகளம் கடுப்ப"
(குறிஞ்சிப்:169–175),

என்னும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

**வேலனின் அறியாமை**

வேலன் தலைவியின் உடல் வேறுபாட்டிருக்கான காரணம் முருகன் என்று வெறியாடனின் போது கூறியதனை பாடல் வரிகள் குறிப்பிடுவதன் மூலம் உணர முடிகிறது.

"எவ்வம் கூர்ந்த ஏமுறு துயரம்,
வெம்மையின் தான் வருத் துறீஇ நம்வயின,
அறியாது அயர்ந்த அன்மைக்கு வெறி என,
வேலன் உரைக்கும் என்ப ஆகலின் "
'(நற்றிணை:273:2–5),

என்னும் பாடல் மூலம் தலைவியின் உடலானது மிகுந்த துயரத்தை அடைந்தது. அன்னை தலைவியின் மீது மிகுந்த வருத்தம் அடைந்தால் தலைவியின் உண்மை நிலை குறித்து அன்னைக்கு தெரியவில்லை. அதனால் அன்னை வெறியாட்டு எடுக்க எண்ணி வெறியாட்டு எடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்ததால் வெறியாட்டத்தின் போது தலைவியின் நிலைமைக்கு முருகனே காரணம் என்று அன்னையிடம் வேலன் கூறினான் என்று வெறியாடல் குறித்த செய்திகள் குறிப்பிட்டுள்ளனர். அன்னை தலைவியின் மீது மிகுந்த அன்பு கொண்டதால் தலைவியின் வருத்தத்தை போக்குவதற்காக அன்னையால் வெறியாட்டு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. அன்னை முருகனை நோய் தீர்க்கும் மருந்தாக கூறுவதை காண முடிகிறது. தலைவனே தலைவியின் நோய்க்குக் காரணம் என்று வேலன் அறியாமல் வெறியாடல் மேற்கொள்ளப்படுவதை நற்றிணை பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

"படர்மலி அருநோய் காதலன் தந்தமை அறியாது உணர்ந்த,
அணங்குறு கழங்கின் முதுவாய் வேலன்,
களவியின் தணியின் நன்றுமன் "
(நற்:282;4–6)

**வேலன் வெறியாட்டில் பாடல் முக்கிய இடம் பெற்றிருந்தமையும் தெய்வத் தன்மை பெற்றிருந்தமையும் அறிகிறோம். இப்பாடல் வேலனுக்கு வழி மரபைக் கருதப்பட்டிருக்கலாம் என்பதனையே 'முதுவாய் வேலன்' என்று தொடர் காட்டுகிறது. அதனால் இப்பாடல்களில் ஒரு மந்திரத்தன்மை இருந்ததை உணர முடிகிறது. (சங்க இலக்கியம் பாட்டு மரபும் எழுத்து மரபம்,கே.பழனிவேலு; பக்கம் 19) குறிப்பிடுவதனை அறிய முடிகிறது.** வேலன் வெறியாடல் குறித்து கூறியதன் மூலம் வேலன் பாடல் பாடும் மரபு வழி வழியாக பின்பற்றப்பட்டு வந்த தன்மையை அறிய முடிகின்றது.

**தோழி வெறி விலக்கல்**

தோழி வெறியாட்டு எடுக்கக் கருதிய வேலனின் அறியாமையைக் கூறி வெறிவிலக்கிய செய்திகளை பற்றி ஐங்குறுநூறு பாடல் அடிகள் மூலம் குறிப்பிடுவதை அறியலாம்.

"கறி வளர் சிலம்பின் கடவுட் பேணி,
அறியா வேலன்,வெறி எனக் கூறும்,
அதுமனம் கொள்குவை அனை இவள்,
புதுமலர் மழைக்கான் புலம்பிய நோய்க்கே"

(ஐங்:243:1–4),

என்னும் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன. தாய்த் தலைவியின் அழகிய கண்கள் பசலை அடைந்ததன் காரணத்தை வேலனிடம் கேட்கிறாள். எதை கேட்டாலும் வேலன் அனைத்து செயல்களுக்கும் காரணம் தெய்வக் குறையே என்றும் வெறியாடலே இதற்கான தீர்வு என்று கூறுகிறான். அதை தவிர வேறு எந்த காரணத்தையும் கூற மாட்டான் என்பதனை இப்பாடல் வரிகள் குறிப்பிடுவதன் மூலம் அறிய முடிகிறது.

தோழி, செவிலியிடம் வேலன் வெறி யாட்டு எடுப்பது பொருத்தமானது அல்ல. இச்செயலானது பிற நகைப்புக்கு வாயிலாக அமையும் என்று வெறிவிலக்கியும் அறத்தோடு நிற்கவும் செய்வதனை அறியமுடிகிறது. மேலும் வேலன் நோய்க்கான மருந்தை அறியாதவன் என்பதனை,

"வெறியென உணர்ந்த வேலன் நோய் மருந்து,
அறியா னாகுதல் அன்னை காணிய",

(குறுந்:360),

என்றும்,

"அறியா வேலற் தரீஇ அன்னை,
வெறிஅயர் வியங்களம் பொலிய ஏத்தி"

(அகம் :242;10–11),

என்ற பாடல் மூலம் அறியலாம்.

அன்னை, தலைவியின் நோயிக்கு முருகனே காரணம் என்று கூறும் வேலன் சொற்களை உண்மை என்று நம்பினாள். அன்னை தலைவியின் நிலை குறித்து வேலனிடம் கேட்டால் வேலன் தலைவியின் நோயிற்கான காரணம் முருகனே என்று கூறுகிறார். வேலனின் வார்த்தைகளை உண்மை என்று நம்பிய செவிலி தாய் கேட்கும் படி தோழி தலைவியிடம் கூறுவதாக அமைந்தது. வெறிவிலக்கி தோழி அறத்தோடு நிற்பதையும் காண முடிகின்றது.

**வெறியாடலின் பயன்**

தோழி தலைவியிடம் அன்னை எடுக்க விருக்கும் வெறியாடல்குறித்து கூறுகிறாள். வேலன் வந்து வெறியாடுகின்றான் வேலன் அவ்வாறு வெறியாடும் போது தலைவனை பெருமையாக பாட வேண்டும். அவ்வாறு அவன் செய்யவில்லை என்றால் வெறியாடுவதால் எந்த பயனும் கிடையாது. என்று கூறுவதை பாடல் அடிகள் தெரிவிக்கின்றன.

"அம்ம வாழி தோழி! பலமலர்,
நறுந்தண் சோலை நாடுகெழு,
குன்றன் பாடாண் ஆயின்,
என்பயன் செய்யுமோ வேலற்கு வெளியே,"

(ஐங்குறு :244:1–4)

வேலன் முருகன் உறையும் மலைகளைப் பற்றி பாடுவது மரபு

அவ்வாறு பாடுவதால் தலைவியின் நோய் தீராது என்று ஐங்குறுநூறு பாடல் கூறுவதனை அறிய முடிகிறது. வேலன் தலைவனுடைய மலைச் சிறப்பை பற்றிப் பாடும் பொழுது அதைக் கேட்டு தலைவி மகிழ்ச்சி அடைவாள் தலைவி நோய் தீரும் அவ்வாறு செய்யாமல் வெறுமனே வேலன் வெறியாடுவது வீண் செயலாகவே அமையும். அதனால் எந்த பயனும் ஏற்படாது என்று தோழி கூறுகிறாள்.

**குறமகள் முருகனை வழிபட்டு வெறியாடல்**

குறவர் குலத்தை சார்ந்த குறப்பெண் தெய்வம் ஆடக் கூடியவர்களாக இருந்ததால் அவள் அவன் வெறியாடும் இடத்தில்

முருகனுக்குரிய கோழிக்கொடிய நட்டு வெண் சிறுகடுகை அப்பினாள். முருகனுக்குரிய மூல மந்திரத்தையும் கூறி வழிபடும்போது மலர்களை தூவி கைகூப்பி வணங்கி வேறுபட்ட நிறங்களை உடைய ஆடைகளை உடுத்தி சிவந்த நூலை கையில் காப்பாக கட்டிக்கொண்டு வெண் பொரியை தூவி வலிமை வாய்ந்த ஆட்டுக்கடாவின் குருதியை வள்ளரிசியைப் பிசைந்து பலியிடத்தில் பலியாக வைத்து பின் சிறிய மஞ்சளோடு சந்தனத்தைத் தெளித்து குளிர்ச்சியின் நிறைந்த செவ்வரலி மாலையுடன் பிற மாலைகளையும் பந்தலில் தொங்க விட்டு.குறப்பெண் மலைப் பக்கத்தில் உள்ள ஊர்களை 'பசியும் பிணியும் பகையும் நீக்குக'என்று வாழ்த்தினாள். மணம் கமழக்கூடிய பொருட்களால் புகை ஏற்படுத்தி குறிஞ்சி நிலத்தில் குறிஞ்சி பண்பாடி அருவி ஓசை போல இசைக்கருவிகளும் முழக்கப்பட்டு சிவந்த நிறத்தை உடைய பல பூக்களை மீண்டும் இட்டு.இரத்தத்தோடு கலந்த திணை அரிசியை பரப்பி வைத்து இறைவன் இவன் என்று பார்ப்பவர்கள் அஞ்சும் படி முருகப்பெருமானே அந்த இடத்திற்கு வரும்படியாக நினைத்து வழிபட்டதனை அறிய முடிகிறது. வேலன் மட்டுமல்லாமல் குறமகளும் வெறியாட்டு நிகழ்த்தியதை அறிய முடிகிறது. என்பதனை,

"இடியுடன் கடவுட் கிட்ட செழுங்குரல்,  
அறியா துண்ட மஞ்ஞை யாடுமகள்,  
வெளியுறவு வனப்பின் வெய்துற்று நடுங்கும்,"

(குறுந்;பா:105),

என்று வெறியாட்டு மகளிர் தோற்றத்தை குறுந்தொகை பாடல் கூறுவதை காணமுடிகிறது.

**முடிவுரை**

சங்ககால மக்களின் பழக்கவழக்கங்களில் வெறியாடலும் காணப்படுகிறது. வெறி என்ற சொல்லிற்கு மணம் என்ற பொருள் உண்டு. பெரும்பாலும் மணம் புரியும் நிலையில் உள்ள மங்கையின் உடல் வேறுபாட்டிற்கு காரணம் தலைவனாய் ஏற்பட்ட நோய் என்பதை அறியாத தாயார் அவ்வேறுபாட்டின் காரணத்தை அறியும் பொருட்டு முதுபெண்டிராகிய கட்டு விச்சியை அமைத்து குறி கேட்பது வழக்கம். முருக வழிபாட்டின் தொடர்புடைய ஒரு வழிபாட்டுச் சடங்காக வேலன் வெறியாடல் மேற்கொள்ளப்படுகிறது.

 ISSN: 2320-3412(P), 2349-1639(O)

தலைவன் தலைவியின் களவு வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கையாக மாற்றுவதற்காக ஒரு செயல்பாடாகவும் அறத்தோடு நின்றுகளுக்கான வழி வழியாகவும் வேலன் வெறியாடல் அமைகின்றது. வெறியாட்டில் போது வேலன் தலைவனை பிரிந்த தலைவியின் நோய் தருவதற்காக முருகனை வழிபாடு செய்கின்றாள். அது வெறியயர்தல், வெறியால், என பல பெயர்களால் வழங்கப்படுகிறது. கட்டு வைத்தல், கழங்கு பார்த்தல், போன்ற இரு காரணங்களால் தலைவியின் நோய்ற்கான காரணங்கள் அறியப்படுகிறது. வேலன் வெறியாடலின் பொழுது களம் அமைத்து பலி கொடுத்து வெறியாடல் நிகழ்த்தப்படுகிறது. வெறியாடலின் பொழுது தலைவிக்காக தோழி அறத்தோடு நின்ற நிலையை குறித்து அறியப்படுகிறது. தலைவியை தலைவனுக்கு திருமணம் செய்வதைப்பதற்காக வழிவழியாகவும் பயனாகவும் வெறியாடல் அமைவதை காணக்முடிகிறது.

**சான்றேன் விளக்கம்**


1. தொல் : அகத்திணை: நூற்பா;5,
2. முருகன் அல்லது அழகு:பல;9,
3. நற்: பா;225,
4. குறுந்:பா:111,
5. அகம்:பா;149,
6. குறுந்:பா;263,
7. ஐங்குறு;பா;259,
8. மேலது:248,
9. கலித்:பா;93,
10. குறுந்: கடவுள் வாழ்த்து:பா;1,
11. தொல்: பொருள்: அகத்திணை;
12. திருமுருகு:206–212,
13. பரி;12,
14. குறுந்:பா;53;வரி;3,
15. தொல்:களவு;5,
16. பரி;4:வரி;14–15,
17. கலித்:1;வரி;23,
18. ஐங்குறு:247,
19. தொல்:களவு;23,
20. மேலது:24,

21. கலி:குறி;3;அடி;26,
22.நற்;268,
23.சங்க நூல்களில் முருகன்:பா;32–34
24.நற்:47,
25.அகம்:114,
26.மேலது:22;வரி;8,
27.மக்களும் மரபுகளும்:ப;7,
28.ஐங்குறு:247,
29.நற்:82,
30. மேலது;47–;9
31. குறுந்:263;1,
32.குறிஞ்:169–175,
33.நற்:273;2–5,
34.மேலது;282:4–6,
35.ஐங்குறு;243;1–4,
36.அகம்:242;10–11,
37.ஐங்குறு;244:1–4,
38.குறுந்:பா:105,

**துணை நூற்பட்டியல்**


1. கி.வா.ஜகந்நாதன் – வழிகாட்டி, முதற்பதிப்பு:1947, மயிலாப்பூர், சென்னை – 600 004,
2. மு.சண்முகம்பிள்ளை – சங்க தமிழரின் வழிபாடும் சடங்குகளும், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113,
3. சாமி. சிவஞானம் எம், ஏ,– திருமுருகாற்றுப்படை உரை, சரஸ்வதி மஹால் நூலகம், தஞ்சாவூர் 613 003,
4. பி.எல்.சாமி. – சங்க இலக்கியங்களில் முருகன் –சேகர் பதிப்பகம், சென்னை;600 078, முதற்பதிப்பு டிசம்பர்:1990,,
5. நச்சினார்க்கினியர் .ஆ – தொல்காப்பியம் பொருளதிகாரம்,கழக வெளியீடு, சென்னை,ஆறாம் பதிப்பகம் – 1965,
6. கு.வெ. பாலசுப்பிரமணியம் – சங்க இலக்கியம் , ஐங்குறுநூறு, மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட், அம்பத்தூர், சென்னை –, 600 098,

7. அ .ப.பாலையன் – நற்றிணை, மூலமும் உரையும்,சாரதா பதிப்பகம்,
8. கே.பழனிவேலு – சங்க இலக்கியம் பாட்டு மரபும் எழுத்து மரபும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், பதிப்பகம் ஆதித்யா அன்மோல்,
9. அகநானுறு– மூலமும் உரையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை,
10. சீ.முத்துலட்சுமி – சங்க இலக்கிய பாடல்களில் காணலாகும் முருக வழிபாட்டின் வாய்மொழி வாய்ப்பாட்டு கோட்பாடு, சர்வதேச தமிழ் ஆய்விதழ்,
11. புலியூர்க்கேசிகன்– குறுந்தொகை தெளிவுரை, சாரதா பதிப்பகம்,
12. புலியூர்க்கேசிகன் – தொல்காப்பியம், சாரதா பதிப்பகம்,
13. நா. வானமாமலை – மக்களும் மரபுகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை – 600 098,
14. புலியூர்க்கேசிகன் – பரிபாடல் ( மூலமும் உரையும்), சாரதா பதிப்பகம் சென்னை –17.
15. எஸ்.கௌமாரீஸ்வரி.தமிழ் மொழி அகராதி, சாரதா பதிப்பகம், சென்னை,
16. நா. கதிரைவேற்பிள்ளை,– தமிழ் மொழி அகராதி, சாரதா பதிப்பகம்,